# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## OS.No.38/2020

Deposition of PW3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 07.07.2022.

Evidence Recorded Time: 12.30 P.M to 01.05 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டி.எஸ்.ராஜா | Caste | : | |
| S/o & W/o. | : | தங்கவேல் | Calling | : | கிராம நிர்வாக அலுவலர், நங்கவள்ளி |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**முதல் விசாரணை:-**

நான் நங்கவள்ளி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். 20.10.2021 முதல் பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. சம்மனில் கண்ட ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். பட்டா எண்.772, சர்வே எண்.158/1ஏ, புஞ்சை ஏக்கர் 0.55-க்கு தீ.ரூ.3.06 பை அதற்குண்டான பட்டா பொன்னுசாமி, பழனியப்பன், பஞ்சநாதம் மனைவி செல்லம் ஆகியோர்கள் பெயரில் உள்ளது. அதற்குண்டான சிட்டா, புலவரைபடம், அ பதிவேடு, அடங்கல் பசலி ஆண்டு 2015 ஆண்டு முதல் 2022 வரை ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அவை சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.4 ஆகும். பட்டா எண்.646, சர்வே எண்.158/1பி புஞ்சை ெ ஹக்.0.30.00 உண்டான அடங்கல், சிட்டா, புலவரைபடம், அ பதிவேடு ஆகிவற்றையும் ஒப்படைத்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.4-ல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பெருமாள் கவுண்டர் மக்கள் இந்திரஜித், பொன்னுவேல் ஆகியோர்கள் பெயரில் உள்ளது. எனக்கு வந்த நீதிமன்ற அழைப்பாணையில் இடத்தை பார்வையிட்டு சாட்சி சொல்ல வருமாறு சம்மன் வந்தது. இடத்தை பார்வையிட்டேனா என்றால் 18.06.2022-ல் பார்வையிட்டேன். சர்வே எண்.158/1ஏ நிலத்திற்கு தென்வடலாக செல்லும் தார்ரோட்டிலிருந்து செல்வதற்கு வழியில்லை, கம்பி வேலி போடப்பட்டுள்ளது. தென்புறத்தில் ஒரு பெரிய இரும்பு

கேட்டும், வடபுறத்தில் ஒரு சிறிய இரும்பு கேட்டும் போடப்பட்டுள்ளது. கேட்டு போட்டு பூட்டியிருந்ததால் உள்ளே சென்று சொத்துக்களை பார்வையிடமுடியவில்லை. மேற்படி இரண்டு கேட்டுகளும் சர்வே எண்.158/1பி யில் உள்ளது. பட்டா வழங்குவதாக இருந்தால் பத்திரங்களின் அடிப்படையிலும், அல்லது வாரிசுதாரர்களின் அடிப்படையிலும் பட்டா வழங்குவது உண்டு என்றால் சரிதான். வா.சா.ஆ.8 பட்டா எங்கள் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டாவிற்கு வருவாய்துறை அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட உத்தரவு தான் வா.சா.ஆ.9 என்றால் சரிதான். அதன்படி எங்களுடைய சிட்டாவில் கூட்டுபட்டாதாரர்களாக இருந்தவர்கள் பெயர்கள் நீக்கப்பட்டு வா.சா.ஆ.8 மற்றும் 9 அடிப்படையில் செல்லம் பஞ்சநாதம் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 இந்திரஜித் மற்றும் பொன்னுவேல் பெயருக்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். எதன் அடிப்படையில் மேற்படி பட்டா ஏற்பட்டது என்பதற்கான குறிப்புகள் உள்ளதா என்றால் குறிப்புகள் எதுவும் இல்லை. ஒரு பத்திரம் ஏற்பட்டால் அந்த பத்திரத்தில் உள்ள அளவிற்கு தான் பட்டா வழங்க முடியுமே தவிர அளவு அதிகமாக வழங்க வருவாய் துறைக்கு அதிகாரமில்லை. சர்வே எண்.158/1பி இந்திரஜித் பெயரில் உள்ள நிலத்திற்கு நான்கு பக்க சக்குபந்தி எல்லைகள் சர்வே எண்.158/1ஏ செல்லம் பஞ்சநாதம் நிலத்திற்கு கிழக்கு, சர்வே எண்.158/1சி பொன்னுவேல், இந்திரஜித் பெயரில் உள்ள தார்ரோட்டிற்கும் மேற்கு, சர்வே எண்.159 இந்திரஜித் மற்றும் இரண்டு நபர்கள் பெயரில் உள்ள நிலத்திற்கு வடக்கு, சர்வே எண்.151 இந்திரஜித் நிலத்திற்கு தெற்கு ஆகும். சர்வே எண்.158/1ஏ நிலத்தினை சுற்றி நான்கு புறமும் இந்திரஜித் நிலங்கள் தான் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.158/1பி 75 1/2 செண்ட் நிலம் ஆகும். சர்வே எண்.158/1ஏ-ல் 1 ஏக்கர் 35 செண்ட் நிலமாகும். சர்வே எண்.158/1டி நிலம் இந்திரஜித் மற்றும் ஒரு நபர் பெயரில் 38 ஏர்ஸ் நிலம் உள்ளது. ஆவணங்கள் அடிப்படையில்தான் மேற்கண்ட விசயங்களை பொறுத்து சாட்சியம் அளிக்கிறேன்.

<u>2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் சென்று தாவா நிலத்தை பார்க்கும்போது சின்ன கேட் அருகில் ஒரு நபர் நடந்து செல்லும் அளவிற்கு ஒரு பாதையும் பெரிய கேட் அருகில் பாதை எதுவும்

போவதுபோல் இல்லை. FMB –ல் சர்வே எண்.158/1பி யில் பாதை எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி FMB–யை பார்த்து இல்லை என்று கூறுகிறார். சர்வே எண்.158/1பி யில் தென்னை மரங்கள் உள்ளது. செல்லம்பஞ்சநாதம் பெயருக்கு எதன் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும்.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

பொதுவாக பட்டா கேட்கும் நபர்கள் அவர்கள் தாக்கல் செய்யும் ஆவணங்களை பரிசீலனை செய்துதான் பட்டா வழங்குவார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:–**

சர்வே எண்.158/1ஏ– ற்கு வா.சா.ஆ.5–ன் படி 29.08.1981–ல் 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம் செல்லம் பஞ்சநாதத்திற்கு பாத்தியப்பட்டது. 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலத்திற்கு எவ்வளவு ஏர்ஸ் என்றால் 64 ஏர்ஸ் வரவேண்டும். சர்வே எண்.158/1பி வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி 1 ஏக்கர் 57 1/2 நிலம் வாங்கியதாக உள்ளது. அதற்கு எவ்வளவு ஏர்ஸ் வரவேண்டும் என்றால் அதே 64 ஏர்ஸ்தான் வரவேண்டும். நான் தாக்கல் செய்த ஆவணத்தின் படி சர்வே எண்.158/1பி யில் 30 ஏர்ஸ் அதாவது 74 செண்ட்டும், சர்வே எண்.158/1சியில் 4.50 ஏர்ஸ், 10 செண்ட்டும், சர்வே எண்.158/1டி யில் 38 ஏர்ஸ் நிலமும் உள்ளது.

**2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் கொண்டு வந்த ஆவணங்கள் எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் 1983–ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் ஆகும். 1983–ம் ஆண்டிற்கு பிறகு மேற்கண்ட சொத்தில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. நான் பார்வையிட்ட சர்வே எண்.158/1 பி நிலத்தில் மின்சார கோபுர லைன் செல்கிறது.

ஒம்/–PW3,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.